# பல்கலைக்கழக அனுமதி பெறுவதில் ஆண் மாணவர்களின் அனுமதி வீதம் குறைவதற்கான காரணங்கள் - சிலா.ஃ.நஸ்ரியா மத்திய கல்லூரியினை மையப்படுத்திய ஆய்வு

**பாதிமா சஹ்ரா ஜுனைதீன், பாதிமா முபீதா முபாரக்**
South Eastern University of Sri Lanka
*zahrajunaideen610@gmail.com, mf.mufee92@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** கல்வி என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாகும். அந்த வகையில் மாணவர்களின் உயர்கல்வியினை தொடர்வதில் திறவுகோளாக இருப்பது க.பொ.த உயர்தரப்பரீட்சையாகும். இப்பரீட்சையில் தேற்றி பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியினை தொடர்வதற்கான வாய்ப்பினைப் பெருவதில் ஆண் மாணவர்கள் பெரிதும் பின்னடைவினை அடைந்துவருகின்றனர். புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரத்தில் அமைந்துள்ள சிலா.ஃ.நஸ்ரியா மத்திய கல்லூரியில் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்கள் பெரும் பின்னடைவினை எதிர்நோக்குகின்றனர். கடந்த ஐந்து வருட காலமாக பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் தெரிவு வீதமானது மிகப்பின்னடைவினை எதிர்நோக்கியுள்ளது. அதற்கான தீர்வுகளை முன்வைப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டன. நேர்காணல்இ குழுக்கலந்துரையாடல் என்பன முதலாம் நிலைத் தரவுகளாகவும் பாடசாலை புள்ளிவிபர அறிக்கை, இணையதளம், சஞ்சிகைகள், அதனுடன் தொடர்புடைய ஆய்வுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டு அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறையில் அளவை நிலை ஆய்வு முறைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து சிலா.ஃ.நஸ்ரியா மத்திய கல்லூரியில் கல்வி கற்ற ஆண்மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறாமைக்கான காரணங்களாக பொறுப்பு, வறுமை, உயர்தரத்திலும் படித்து பின் பல்கலைக்கழம் சென்றும் படிக்க வேண்டும் என்கின்ற மன உணர்வு: காதல், வாழ்க்கையில் நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும் என்கின்ற உணர்வு, தனிப்பட்ட உளவியல் ரீதியான பிரச்சினைகள் போன்ற பல்வேறு காரணங்கள் கண்டறியப்பட்டன. இவற்றுக்கான தீர்வுகளாக அரசு வறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு நிதி உதவி வழங்கல், பல்கலைக்கழக கல்வி தொடர்பாக மாணவர் மத்தியில் ஊக்கத்தினையும், சிறந்த அபிப்ராயத்தினையும் ஏற்படுத்தல் போன்றவற்றின் மூலம் ஆய்வுப் பிரதேசப்பிரச்சினைகளுக்கு ஓரலவேனும் தீர்வினை பெற முடியும் என்பதோடு இவ் ஆய்வானது எதிர்காலத்தில் விரிவுபடுத்தப்படும் போது வேறுபட்ட பெறுபேறுகள் கிடைக்க வழிவகைகள் உண்டு.

**திறவுச் சொற்கள்:** பல்கலைக்கழகம், ஆண்மாணவர்கள், அனுமதி

## 1. அறிமுகம்

கல்வி என்புது மனித வாழ்க்கையில் இன்றிமையாத ஒன்றாகும். அந்தவகையில் மாணவர்களின் உயர்கல்வியினை தொடர்வதில் திறவுகளாக இருப்பது க.பொ.த உயர்தரப்பரீட்சை ஆகும். இப்பரீட்சையில் தேற்றி பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதில் ஆண் மாணவர்கள் பெரிதும் பின்னடைவினை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றான சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியில் கடந்த வருட காலமாக ஆண் மாணவர்கள் மிகக் குறைந்தளவில் பல்கலைக்கழக அனுமதியை பெறுகின்றனர். அனுமதி வீதம் பூச்சியத்தினை அடைந்துள்ளது.

இப் பாடசாலையில் கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகள் காணக்கடுகின்றன. இப் பிரிவுகளில் கல்வி பயில வரும் மாணவர்களுள் நூற்றுக்கு 99% ஆன பெண்களே பல்கலைக்கழக அனுமதியினை பெறுகின்றனர். மிகுதி 1% ஆண் மாணவர்கள் என்பது வருத்தக் கூடிய விடயமாகும். ஆந்த வகையில் இவ் ஆய்வானது சிலா/நஸ்ரியா மத்திய கல்லூரியின்

ஆண் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி வீதம் குறைவதற்கான காரணங்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் ஆராய்வதற்காகவே இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

I. *சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியின் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் அனுமதி வீதத்தினை கண்டறிதல்.*

II. *இப் பாடசாலையில் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் அனுமதி குறைவதற்கான காரணங்கள்.*

III. *இப் பிரச்சினைக்கு தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல்.*

## 3. இலக்கிய மீலாய்வு

இவ் ஆய்வுக்கென பல இலக்கிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் Rakshana sharrifudeen என்பவர் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு ஆண்களுக்கா, அல்லது பெண்களுக்கா என்ற சமூக பிரச்சினையை மையமாகக் கொண்டு ஒரு விவரண புள்ளிவிபரவியல் ரீதியிலான ஆய்வினை மேற்கொண்டுள்ளார். இவ் ஆய்விற்காக அளவுசார், பண்புசார் தரவுகளை பயன்படுத்தியுள்ளார். இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள இச் சமூகப் பிரச்சினையை இனங்கண்டு ஆய்வின் இறுதியில் இப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் நடைமுறை சார்ந்த ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளார். I.M. Kamala Liyanage (2014) என்பவர் Education system of Sri Lanka:strength and weaknesses என்ற தலைப்பிலான ஆய்வில் பல்கலைகழக அனுமதியில் ஆண்களின் நிலை தொடர்பாகவும் விவரண ரீதியிலான ஆய்வினை மேற்கொண்டு அது தொடர்பிலான முடிவுகளையும் புள்ளிவிபர ரீதியில் அட்டவனை படுத்தியுள்ளார். T.Srikamalanthan என்பவர் 'நான்' எனும் உளவியல் சஞ்சிகையில் (2009) மாணவர்கள் கற்றல் சம்பந்தமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மானிட ஆய்வு முறையில் ஆய்வினை மேற்கொண்டு அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைத்துள்ளார். இவ்வாராக மேற்கூறப்பட்ட இலக்கிய மீளாய்வுகள் மூலமாக தரவு சேகரிப்பு நுட்ப முறைகள், மாணவர் பிரச்சினைகள், அவர்கனின் மனநிலைகள் அவற்றுக்கான தீர்வுகள் என்பவற்றினைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது.


## 4. ஆய்வுப் பிரச்சினை

சமீப காலமாக இலங்கையின் பல்கலைகழகங்களில் அனுமதி பெறுவோரில் பாலடிப்படையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. அரைவாசிக்கும் அதிகமான பெணகள் பல்கலைகழக அனுமதி வீதத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரில் அமைந்துள்ள பாடசாலைகளுள் சிலா/நஸ்ரியா மத்திய கல்லூரியில் பாலடிப்படையில் பல்கலைகழக அனுமதியில் பெரும் வித்தியாசம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆண் மாணவர்கள் உயர்தர பெறுபேறுகளில் பிரகாசிக்காமைக்கான காரணங்களை கண்டறிவதும், அப் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கான வழிவகைகளை கண்டறிவதுமே ஆய்வுப் பிரச்சினையாகும்.

## 5. ஆய்வு முறையில்

### 5.1 ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள சிலாபம் நகரில் அமையப்பெற்றுள்ள சிலா/நஸ்ரியா மத்திய கல்லூரியே ஆய்வுப்பிரதேசமாகும். அங்கு கிட்டத்தட்ட 1300 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். அங்கு உயர்தரத்தில் கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகள் காணப்படுகின்றன.




### 5.2 தரவுகளும் பகுப்பாய்வு முறைகளும்

ஆய்வு ஒன்றினை முறையாகவும் சிறப்பாகவும் செய்வதற்காக ஆய்வு முறையிலும் தரவுகள் மற்றும் பகுப்பாய்வு என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. சிலா/நஸ்ரியா மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் ஆண் மாணவர்களின் படிக்கும் திறன் குறைவாகவே உள்ளது. இவர்களின் கல்வி நடவடிக்கையில் அதிக கவனம் பெற்றோர்களினாலும், அதிபர், ஆசிரியர்களினாலும் முன்னெடுக்கப்படினும் அவர்களின் கல்வி நடவடிக்கையில் எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை.

இவ் ஆய்வில் அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பயன்பட்டதோடு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆண் மாணவர்கள் போன்றோரிடம் நேர்காணல் மூலமும், குழுக்கலந்துரையாடல் மூலமும் முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுப்பிரதேசம் தொடர்பாக எவ்வித நூல்களும், சஞ்சிகைகளும் வெளிவராததால் பாடசாலை புள்ளிவிபர அறிக்கை, சஞ்சிகைகள், இணையம் போன்றவற்றிலிருந்து தரவுகள் பெறப்பட்டன.

## 6. ஆய்வின் முடிவுகள்.

**நோக்கம் 01**

சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியின் பல்கலைகழக அனுமதியில் ஆண் மாணவர்களின் அனுமதி வீதத்தினை கண்டறிதல்.

ஆய்வுப் பிரதேசத்தில் கல்வி பயில்வோரில் பால் அடிப்படையில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் படிக்க வரும் மாணவர்களுள் பெரும்பாலானோர் பெண்களே ஆவர்.பொதுவாக 4:1 எனும் அடிப்படையிலேயே உயர் தரத்தில் ஆண் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.இவ்வாறு உயர் தரம் சித்தியடையும் அனைவரும் பல்கலைகழக அனுமதி பெறுவதில்லை.இம் மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கான சகல வசதிகளும் பாடசாலை வளாகத்தினால் செய்து கொடுக்கப்பட்டிருந்தமை ஆய்விலிருந்து தெரியவந்தது.கடந்த ஐந்து வருடங்களாக ஆண் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி வீதமானது மிக மோசமான நிலையில் உள்ளமையை பாடசாலை புள்ளிவிபர அறிக்கையிலிருந்து தெரிய வந்தது.

**அட்டவணை - 01**


சிலா/நஸ்ரியா மத்திய கல்லூரியின் பல்கலைகழக அனுமதித் தொகை.

| ஆண்டு | அனுமதித் தொகை |
|---|---|
| 2011 | 05 |
| 2012 | 12 |
| 2013 | 03 |
| 2014 | 07 |
| 2015 | 07 |

**அட்டவணை - 02**

சிலா/நஸ்ரியா மத்திய கல்லூரியின் பல்கலைகழக அனுமதித் தொகை பால் அடிப்படையில்.

| ஆண்டு | ஆண் | பெண் |
|---|---|---|
| 2011 | - | 05 |
| 2012 | 06 | 06 |
| 2013 | - | 03 |
| 2014 | 01 | 06 |
| 2015 | 01 | 06 |




**நோக்கம் - 02**

சிலா/நஸ்ரியா மத்திய கல்லூரியின் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் அனுமதி வீதம் குறைவதற்கான காரணங்கள்.

ஆய்வுப் பிரதேசமாக விளங்கும் சிலா/நஸ்ரியா மத்திய கல்லூாயில் கடந்த ஐந்து வருட காலமாக பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் பின்னடைவு குறித்து ஆய்வு செய்யப்பட்ட வேலை இப் பிரச்சினைக்கான காரணங்களாக சில அதிர்ச்சியான காரணிகளும்,சில சுவாரஷ்யமான காரணிகளும் கண்டறியப்பட்டன. குடும்பப் பொறுப்பு,பொருளாதார ரீதியில் குடும்பத்துக்கு உறுதுனையாக இருக்க வேண்டிய நிலை, வறுமை, அதிகரித்த பொழுதுபோக்கு அம்சங்களின் தாக்கம், வளங்களின் முறையற்ற பயன்பாடு,கல்வி மற்றும் அதன் பேறு பற்றிய அறியாமை,காதல் போன்ற உணர்வுகளினால் கல்வியை தொடர்வதில் ஏற்பட்ட விரக்தி அல்லது கவனயீனம்,அரச தொழில் வாய்ப்பினை பெற்றால் அதிகமாக சம்பாதிக்க முடியாது என்கின்ற உணர்வு, வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை பெற உயர்தரம் மட்டும் படித்தால் போதும் என்கின்ற மன உணர்வு போன்றவையே ஆண் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறாமைக்கான காரணங்களாக கண்டறியப்பட்டன.

**நோக்கம் - 03**

பிரச்சினைக்கான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல்.

ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்பட்டு பல விடயங்களையும் கருத்திற்கொண்டு அதிபர், ஆசியர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட குழுக்கலந்துரையாடல் மூலமாகவும், ஊர் தலைவர்கள், ஓய்வு பெற்ற கல்வியியளாளர்களினைப் பேட்டி கண்டதிலும் இவற்றிற்கான பல தீர்வுகளும், ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. ஆந்த வகையில மாணவர்களின் வறுமை நிலையினை கருத்திற்கொண்டு தனவந்தர்களின் உதவியோட ஆண் மாணவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கி அவர்களைக் கற்பதில் ஆர்வம் ஊட்டுதல், பருவ வயதில் ஏற்படும் காதல் உணர்வுளால் கல்வியில் ஏற்படும் அசமந்தப் போக்கினை மாற்ற அவர்களுக்கு வாரம் தோறும் அல்லது மாதாந்தோறும் கருத்துரைகளை (Councelling Programmes) வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். ஆண் மாணவர்களின் கல்வியியைப் பாதிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் மற்றுமொரு காரணி குடும்பப்பின்னணியாகும். எனவே அதனைக் கருத்திற்கொண்டு பொறுப்புடன் கூடிய மாணவர்களுக்கு பகுதி நேரத் தொழில் வாய்ப்புக்களுடன் கல்வியைத் தொடரும் வசதிகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல், அரச வேலைவாய்புக்களில் சம்பளம் போதாமை

எனும் மன உணர்வினை மாற்றி தகைமைகளையும் திறன்களையும் வளர்த்துக் கொள்வதனால் அதிக சம்பளம் அரச வேலைவாய்ப்புக்களிலும் பெறலாம் என்ற அபிப்ராயத்தை ஏற்படுத்தல், உயர்தரக் கல்வி முறையில் மாற்றங்களை ஏற்படுத்தி மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வி கற்க வழிவகுத்தல், பொழுது போக்கு வசதிகளின் தாக்கத்தினால் கல்வியில் ஏற்படும் தாக்கத்தினை நிவர்த்திப்பதில் பெற்றோர்கள் அதிகம் கவனம் செலுத்துதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவினால் வெளியிடும் வழிகாட்டல் புத்தகத்திற்கமைய கற்கை நெறிகளை ஏற்படுத்தல் சாதாரண தரத்தினாலேயே ஆண் மாணவர்களின் திறமைகளை இனங்கண்டு அதற்கேற்ப அவர்களை வழிநடத்தல், பல்கலைக்கழக தெரிவினால் பெறப்படும் நன்மைகளையும், பல்கலைக்கழக வாழ்வு குறித்தும் அவர்களுக்கு ஆர்வமூட்டல், குறித்த பாடசாலையில் உயர்கல்வி கற்பதற்காக மேலும் பல்வேறு துறைகளை உருவாக்கல் போன்ற தீர்வுகளும் ஆலோசனைகளும் பெறப்பட்டன.

## 7. முடிவுரை.

இவ் ஆய்வின் மூலம் சிலா/நஸ்ரியா மத்திய கல்லூரியின் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்கள் பெரிதும் பின்னடைவு பெறுகின்றமை இனங்காணப்பட்டது.இப் பிரச்சினைக்கு தீர்வாக அரசாங்கமும்,அரச சார்பற்ற நிறுவங்களும்,சிவில் சமூகமும் ஒன்றினைந்து மாணவர்களின் எதிர்காலம் குறித்த நோக்கத்தோடு முனைப்புடன் செயல்பட்டு விழிப்பணர்வூட்டல்களை மேற்கொள்வதனால் இப் பிரச்சினைக்கு தீர்வ காணலாம் எனவும் கண்டறியப்பட்டது.மேலும் ஆண் மாணவர்களும் தமது கல்வியை தொடர்வதில் மிக அக்கறையுடன் செயற்படுவதனாலும் எதிர்காலத்தில் பல்கலைக்கழக அனுமதியில் ஆண் மாணவர்களின் அனுமதி வீதமும் அதிகரிக்கும் என்பதையே இவ் ஆய்வு கூறுகின்றது.

## REFERENCES


1. Srikamalanathan,T **(**2009**).** மாணவர்கள் கற்றல் சம்பந்தமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள். "NAAN" Tamil Psychological Magazine. PP 9-13
2. Roar Tamil. ஊயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகள் ஆண்களுக்கா பெண்களுகா? - இலங்கையில் உயர்கல்வி. [online] wed 19 October 2016:

   http://roartamil.com/features /university-education/